செ.வெ.எண்:67 நாள்:26.09.2017

**பத்திரிக்கை செய்தி கிராம சபைக் கூட்டம்**

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 425 கிராம ஊராட்சிகளிலும் காந்தி பிறந்த தினமான 02.10.2017 அன்று காலை 11.00 மணிக்கு நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில் பின்வரும் பொருட்கள் விவாதிக்கப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.

- ஜூன் 2017 முதல் ஜூலை 2017 முடிய கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல்.
- கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்ட அறிக்கையினை கிராம சபை கூட்டத்தின் முன் வைத்து ஒப்புதல் பெறுதல்.
- ஊராட்சியின் முந்தைய ஆண்டிற்கான ஆண்டறிக்கை மற்றும் வரவு செலவு கணக்கின் மீதான தணிக்கை குறிப்புகள் கிராமசபை கூட்டத்திற்கு முன் சமர்ப்பித்தல்.
- அனைத்து ஊராட்சிகளிலும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு மக்களிடையே ஏற்படுத்துதல்.
- திடக்கழிவு மேலாண்மை திட்டம் தொடர்பான தகவல் தெரிவித்தல்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட பணிகளின் வகைப்பாட்டினை கிராம சபைக் கூட்டத்தில் ஒப்புதல் பெறுதல்.
- பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் II -ன் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள முன்னுரிமைப் பட்டியலினை கிராம சபையில் வைத்து ஒப்புதல் பெறுதல்.
- அம்மா பூங்கா மற்றும் அம்மா உடற்பயிற்சி கூடம் அமைக்கப்படுதல் குறித்து விவாதித்தல்.
- தாய் திட்டம் 2016-17-ம் ஆண்டிற்கான பணிகள் தேர்வு செய்து கிராம சபைக்கூட்டத்தின் முன் வைத்து ஒப்புதல் பெறுதல்.
- ஊராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப் பணிகள் முன்னேற்றம் மற்றும் நிதி செலவின விபரங்கள் குறித்து விவாதித்தல்.
- மகளிர் திட்ட செயல்பாடுகள் குறித்து விவாதித்தல்.
- கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் புதுவாழ்வு திட்டம் செயல்பாடுகள் குறித்த அறிக்கைகள்.
- கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு மற்றும் இதர காய்ச்சல் தடுப்பு குறித்து விவாதித்தல்.
- ஐந்தாண்டு திட்டம் மார்ச் 2017ல் முடிவடைவதை ஒட்டி "நிதி அயோக்" (NITI Aayog) என்ற தேசிய நிறுவனத்தின் மூலம் அடுத்து வரும் 15 வருடங்களில் இந்தியாவின் முன்னேற்றத்திற்காக முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய கீழ்க்காணும் இனங்கள் குறித்து கிராம சபாவில் மக்களின் கருத்துகளை வைத்து ஒப்புதல் பெறுதல்.
  1) விவசாய மேம்பாடு
  2) கல்வி
  3) வேலைவாய்ப்பு உருவாக்குதல்
  4) சுகாதாரம்
  5) நகரமயாக்குதல்
- 01.01.2017-ஐ தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல்களை சுருக்கமுறை திருத்தம் செய்த பின்னர் வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியல்களை கிராம சபைக் கூட்டத்தில் ஒப்புதல் பெறுதல்.
- ஊராட்சி மன்றத் தனி அலுவலரால் கொண்டு வரப்படும் இதர பொருட்கள் குறித்தும் விவாதிக்கப்படவுள்ளது.

எனவே பொது மக்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் அனைவரும் திரளாக கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் செய்தி குறிப்பில் தெரிவித்தார்கள்.

**வெயியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம திருநெல்வெலீ**